**மத்திய அதிவேகப்பாதைச் செயற்திட்டத்திம் (பிரிவு - I) - 2017**

மத்திய அதிவேகப்பாதைச் செயற்திட்டத்தின் (பிரிவு - I) 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

2015 யூலை 08 இல் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம், முன்னாள் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சாகவிருந்த தற்போதைய நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை முறையே செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுல்படுத்துனராகக் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மத்திய அதிவேகப் பாதையின் நிர்மாண வேலைகள் 04 பிரிவுகளின் கீழ் அமுல்படுத்துவதற்கு பட்டியலிட்டிருந்தது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2016 திசெம்பர் 29 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2020 ஆகஸ்ட் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் பிரிவு - 01 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கடவத்தியலிருந்து மீறிகம வரையான அதிவேகப் பாதையின் 36.59 கிலோமீற்றர் நிர்மாண வேலைகள் தொடர்பான அவதானிப்புக்களினை இந்த அறிக்கை கொண்டுள்ளது.

**1.3 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும்

பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்க நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்குக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஊ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிட்டப்பட்ட விடயங்களிலிருந்தான செம்மையாக்கங்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தது என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 ஆவணரீதியான சான்றுகளின் பற்றாக்குறை

கம்பஹா மாவட்டத்தின் 06 பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள குடியிருப்பு காணிகளின் கொள்வனவு தொடர்பில் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,832 மில்லியன் கூட்டுத்தொகையான இழப்பீட்டு செலுத்துகைகள் செயற்திட்ட கண்காணிப்பு அலகு அலுவலகங்களில் பேணப்பட்ட தேவையான தகவல்கள் மற்றும் ஏனைய விபரங்களின் பற்றாக்குறை காரணமாக, கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

பாதீட்டு மதிப்பீடு - 2017 இன் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளினை அமுல்படுத்துவதற்கு ரூபா 5,850 மில்லியன் தொகையான ஒதுக்கீடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், ரூபா 2,300 மில்லியன் தொகையொன்று மீளாய்வாண்டின் போது வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், காணிக் கொள்வனவு செயன்முறையினை அமுல்படுத்தல் பொதுத் திறைசேரியிடமிருந்து நிதிகளினை உரிய நேரத்தில் விடுவிப்பதில் தாமதங்கள் காரணமாக, 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,073.50 மில்லியன் தொகையொன்று மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், பொதுஹர தொடக்கம் ரம்புக்கன வரை அதிவேகப் பாதையின் பிரிவு - 03 இன் கீழ் நிர்மாண வேலைகள் தொடர்பான ஒப்பந்தத்தினை அளிப்பதற்கு 2014 நவம்பர் 17 இல் வெளிநாட்டு நிர்மாண கம்பனியொன்றுடன் உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக்கொள்வதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருந்தது. எவ்வாறாயினும், ஓராண்டிற்கும் அதிகமாக பொருத்தமான நிதியளிப்பு மூலமொன்றை கண்டுபிடிப்பதில் தாமதங்கள் காரணமாக தொடர்புடைய உடன்படிக்கை பயனற்றதாகவும் செல்லுபடியற்றதாகவும் மாறியது. மேலும், 2015 யூலை 06 ஆந் திகதிய அமைச்சரவை ஞாபனத்தின் பிரகாரம், அதிவேகப்பாதையின் பிரிவு - 03 இன் கீழ் ஏற்பட்ட கிரயத்தை ஈடுசெய்வதற்கு மேற்குறித்த ஒப்பந்ததாரர்க்கு கடவத்தியிலிருந்து மீறிகம வரையான அதிவேகப்பாதையின் பிரிவு - 01 இன் கீழ் வேண்டப்படாத நிர்மாண ஒப்பந்தமொன்றை அளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. மேலும், முன்மொழியப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கை தொடர்பில் ஏற்றுக்கொள்ளல் கடிதமொன்றில் கைச்சாத்திடுவதற்கு ஒப்பந்தக்காரர் இணங்கியிருக்கவில்லை. அதன் விளைவொன்றாக, 2017 திசெம்பர் 31 வரையிலும் செயற்திட்டத்தினால் இடைக்கால செலுத்துகை சான்றுப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வடிவமைப்பு மற்றும் நிர்மாண மேற்பார்வை சேவைக்கான ஒப்பந்தம், உள்ளூர் அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றுடன் மேற்கொள்ளப்பட்ட நிதி உடன்படிக்கைகளின் கீழ் ரூபா 2,548.92 மில்லியன் கிரயமொன்றில் கூட்டு முயற்சியொன்றுக்கு அளிக்கப்பட்டிருந்ததுடன் பூகோள தொழில்நுட்ப புலனாய்வுகளின் வேலைகள், விபரமான கட்டமைப்பு வடிவமைப்புக்களின் வடிவமைத்தல் மற்றும் குவியல் பரீட்சிப்பு போன்றவை மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

**3.3 காணிக் கொள்வனவு நடவடிக்கைகள்**

------------------------------------------------------------------

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், அதிவேகப் பாதையின் பிரிவு - 01 இன் கீழ் 939 தனியுரிமைக் காணித் துண்டுகள் உள்ளடங்களாக 5,159 காணித்துண்டுகளினை கொள்வனவு செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டதுடன் அதில் 1,483 காணித் துண்டுகள் மாத்திரம் கொள்வனவுசெய்யப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,883 மில்லியன் தொகையான இழப்பீடு செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், காணிக் கொள்வனவு செயற்பாடுகளின் செயன்முறையினை துரிதப்படுத்தியமைக்காக பிரதேச செயலகங்கள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, காணி அமைச்சு, நில அளவை மற்றும் விலைமதிப்பு திணைக்களங்களின் ஊழியர்களுக்கு ரூபா 14 மில்லியன் கூட்டுத்தொகையான ஊக்குவிப்பு செலுத்துகைகள் செலுத்தப்பட்டிருந்தது.

**3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்**

------------------------------------------------------------

மீள்குடியேற்ற உத்தியோகத்தர் மற்றும் பெறுகை நிபுணர் போன்ற செயற்திட்டத்தின் முக்கிய பதவிகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன், அது செயற்திட்டத்தின் சுமூகமான தொழிற்பாடுகளினை தாக்கமளித்திருந்தது. எவ்வாறாயினும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி 03 ஆலோசனையாளர்களினை செயற்திட்டம் ஆட்சேர்ப்புச் செய்திருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக ரூபா 1.10 மில்லியன் தொகையொன்றை செலுத்தியிருந்தது.